DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.11**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | கதிரேசன் |
| Father Name | : | ராமையா |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 8, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 9வது எதிரி ஆஜர் இல்லை. 9வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது திருப்பரங்குன்றத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயம் நான் டிவிஎஸ் நகரில் குடியிருந்தேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று கூறிவிட்டேன்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இவ்வழக்கில் இறந்துபோன சுரேஷ்பாபு என்பவர் எங்கள் ஏரியாவில் தான் குடியிருந்து வந்தார் என்றும், 31.01.2013ம் தேதி இரவு 09.00 மணிக்கு நான் வேலையை முடித்து வீட்டிற்கு வந்தேன் என்றும் எங்கள் வீட்டின் முன்பு கூட்டமாக பொதுமக்களும் போலீஸாரும் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும்

நான் என்னவென்று விசாரிக்க பொட்டு சுரேஷை அவர் வாகனமான TN 59 AQ 6789 என்ற காரை வழிமறித்து பயங்கரமான அருவாள், கத்தி, உருட்டுகட்டை ஆயுதங்களால் தாக்கி சேதப்படுத்தி பொட்டு சுரேஷை இழுத்துபோட்டு வெட்டி குத்தி கொலை செய்துவிட்டு அவர்கள் வந்த வாகனத்தில் தப்பி சென்றுவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.11 14:46:19 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.